(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

THE HON. THIRU SI. PA. ADITANAR : (a) and (b) : During the year 1974-75, 400 quintals of seeds of a variety of wheat known as 'Chota Lerma' were obtained from the Government of India free of cost and distributed to the wheat-growers in the districts of the Nilgiris, Coimbatore and Madurai. No other scheme has been evolved.

Sugarcane Cess.

* 171 *Q.*—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the amount collected yearwise by way of Sugarcane Cess from the North Arcot District Co-operative Sugar Mill from 1970-71 to 1972-73 ; and

(*b*) the details of the road-works undertaken out of the cess fund in the Mill Area and the expenditure incurred therefor ?

கரும்பு மேல் வரி.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் கரும்பு செஸ் மூலம் 1970—71 முதல் 1972-73-ஆம் ஆண்டு வரை வசூலான தொகை ஆண்டு வாரியாக எவ்வளவு?

(இ) இதன் மூலம், இவ்வாலையின் பகுதியில் எடுத்த சாலை வேலைகளின் விபரமும் தொகையும் யாது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எல்.பலராமன் : தலைவரவர்களே, 1970-71 ஆம் ஆண்டில் பங்கீடு தரவில்லையென்று பதிலில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கான காரணம் என்ன ? ஆனால், 1970-71-ல் செலவு 25 ஆயிரம் ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். நடைமுறையில் இது எப்படி என்ற விவரத்தை நான் அறிய விரும்புகிறேன். ஒதுக்கீடு எதுவும் இல்லையென்று இங்கே பதிலில் காணப்படும்போது, செலவு மட்டும் 0·25 இலட்சம் ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். 1971-72, 1972-73-ல் கரும்பு

@50-51ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1975 மார்ச் 22]

மேல்வரி வருமானம் 13 இலட்சம் ரூபாய், 21·85 இலட்சம் ரூபாய் என்றும் செலவு 1·28, 2·16 இலட்சம் ரூபாய் என்றும் கூறியிருக்கின்றார்கள். இந்த விகிதாசாரத்தைப் பார்க்கும்போது செலவு மிகவும் குறைவாக இருக்கிறது. அந்த ஆலைக்கு ஒதுக்கீடு செய்த தொகையை முழுமையாகச் செலவு செய்வதற்கு அரசாங்கம் ஏதாகிலும் வழி முறைகளையும், விதிமுறைகளையும் வகுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, the hon. Member has raised a very general question, namely, the Sugarcane Cess Fund collections are very much above the utilisation. The matter is under the consideration of the Government. I may mention here that probably, the Sugarcane Cess was first levied in 1949 under the Madras Sugar Factories Control Act of that year, under section 14. It was very small. Then it was increased. The rate of increase.......

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, "பாயிண்ட் ஆப் ஆர்டர்".

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, தமிழில் கேள்வி கேட்கப் பட்டிருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழில் பதில் சொல்வது தான் நல்லது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

MR. CHAIRMAN: The Hon. Minister is expected to give the answer in Tamil.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்சினை, செலவைவிட சுகர்கேன் செஸ்ஸுக்கு வசூலாகின்ற தொகை மிக அதிகமாக இருக்கிறது என்பது. அந்தப் பிரச்சினையைப் பற்றி விளக்க வேண்டுமென்பதற்காகச் சொன்னேன். 1949-ஆம் ஆண்டிலே முதன் முதலாக இந்த "சுகர்கேன் செஸ்" திட்டம் தொடங்கப்பட்டது. அதற்குப் பிறகு பல முறை அப்போதிருந்த செஸ் விகிதம் கூடிக்கொண்டே போயிற்று. 1950-ல் அப்பொழுதிருந்த "டாரிப் போர்ட்" மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது கிளப்பும் ஆட்சேபணையை எழுப்பினார்கள். அந்த "டாரிப் போர்ட் ரெகமண்டேஷன்" ஆங்கிலத்தில் இருக்கிறது. 'Objection to the cess being absorbed in the General revenue in U.P. and Bihar.' உத்தரப்பிரதேச மாநிலத்திலும் பீகார் மாநிலத்திலும் "சுகர்கேன் செஸ்" என்று வசூல் செய்து பொது வருமானத்தில் சேர்த்துக்கொள்கிறார்கள் என்பதற்காக அப்பொழுதிருந்த "டாரிப் போர்ட்" அதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்தது. "that the State Governments should either spend the Cess on sugarcane development or reduce the Cess to a figure" consistent with the requirement of cane development. எல்லா பணத்தையும் "சுகர்கேனுடைய" வளர்ச்சிக்காக, கரும்பு வளர்ச்சிக் காகச் செலவு செய்ய வேண்டுமென்றும் இல்லையென்றால் செஸ்ஸைத் தவிர்க்க வேண்டுமென்றும் அப்பொழுதிருந்த "டாரிப் போர்ட்" சொன்ன

தன் காரணமாக அப்பொழுதிருந்த அரசு 'Government of Tamil Nadu then decided to utilise the realisation for the cane development' குறைப்பதை விட வருகின்ற வருவாயை சுகர்கேன் டெவலெப்மெண்டுக்குச் செலவு செய்யவேண்டுமென்று அந்த வருஷம் முடிவு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு சுகர்கேன் "அட்வைசரி கமிட்டி" 4—6—1951-ல் இதே மாதிரி ஒரு தீர்மானத்தைப் போட்டார்கள். இப்பொழுது அது சம்பந்தமான கடிதப் போக்குவரத்தைப் பற்றியெல்லாம் சொல்லு வதற்கு நேரமுமில்லை, தேவையுமில்லை. இறுதியாக 14—3—1975-லே "அக்கவுண்டெண்ட்-ஜெனரல்" அவர்களிடமிருந்து ஒரு குறிப்பு வந்திருக்கிறது. அதிலே அவர்கள் குறிப்பிட்டிருப்பது: "Expenditure made from the Fund was much below the accruals." மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும் அதே கருத்தைச் சொல்லி அதோடு கூட இன்னும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் "The Committee on Public Accounts 1965-66 also observed that the Government's position vis-a-vis these funds was that of a trustee and it was only just that moneys were spent within a reasonable time on the objectives for which the cess was collected". அரசின் கையில் வைத்திருப்பதை விட அப்போதைக்கப்போது கூடியவரையிலே என்ன காரணத்திற்காக இந்த செஸ் வரி ஏற்படுத்தப் பட்டதோ அதற்காகச் செலவு செய்ய வேண்டுமென்று "அக்கவுண்டெண்ட்-ஜெனரல்" அவர்கள் ஒரு குறிப்பு எழுதி அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே தான் நான் சொல்லுகிறேன் இந்தக் காரியம் முற்றிலும் இந்த அரசின் ஆய்வில் இருக்கிறது.

THIRU G. VASANTHA PAI: Sir, may I ask a question? Why is it that no amount was collected in 1970-71?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, the details of the amount spent............... அநேக ஆலை அதிபர்கள் 1970-71-ல் குறித்த காலத்தில் பணம் கொடுக்க வில்லை. பல காரணங்களை அதற்குச் சொன்னார்கள். அதற்குப் பிறகு அவர்களுக்கெல்லாம் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. இந்த செஸ்ஸை 'கலெக்ட்' பண்ணுவதற்கு அரசுக்கு ரெவன்யூ ரெக்கவரி ஆக்டின்கீழ் அதிகாரம் இருக்கிறது. கோர்ட்டுகளிலே தீர்ப்பு வாங்காமலேயே நாங் கள் இதை நிறைவேற்ற முடியும். வரி இவ்வளவு வரவேண்டியிருக் கிறது என்று அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்த பிறகு, அடுத்த ஆண்டு முதல் சரியாக வருவாய் வந்துகொண்டிருந்தது.

THIRU G. VASANTHA PAI: Sir, have the Government now put the Purchase Tax instead of the Cane Cess?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, "பர்சேஸ் டாக்ஸ்" என்பது வேறு சட்டத்தின்கீழ் வருகிறது. அது "சேல்ஸ்டாக்ஸ் அண்ட் பர்சேஸ் டாக்ஸ்" ஆக்டின்கீழ் வருகிறது. இது வேறு சட்டம். 'மெட்ராஸ் சுகர் பேக்டரீஸ் கண்ட்ரோல் ஆக்ட், 1941"-ன் கீழே இந்த செஸ் போடப்படுகிறது.

1975 மார்ச் 22]

THIRU G. VASANTHA PAI: : Sir, may I remind the Hon. Minister that now in many States Purchase Tax is being put instead of Cane Cess? I want to know whether the Government of Madras have put the Purchase Tax in lieu of the Cane Cess.

MR. CHAIRMAN: It is Government of Tamil Nadu.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, I have already answered that the Purchase Tax is not in lieu of the Cess collected. Probably, the hon. Member puts an idea into the mind of the Government that instead of collecting it in the shape of cess and keeping it in a separate fund for utilisation for a special purpose, we can as well put in a Purchase Tax and use it in the General funds.

THIRU G. VASANTHA PAI : Sir, I find the Hon. Minister is assimilating such ideas.

(பிற்பகல் 4–30)

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, 1970–71–ஆம் ஆண்டில் வரியேதும் இல்லை. ஆனால் ரூ. 25,000 செலவு செய்யப்பட்டிருக்கிறது. செஸ் என்றால் அதை அரசாங்கத்தின் பொது நிதியில் சேர்க்க முடியாது. செஸ் என்றால், எவ்வளவு செஸ் வருகிறதோ, அதை வேறு பணிக்கு ஒதுக்காமல் செலவிட்டுவிட வேண்டும். வரி என்றால் தான் அதை அரசாங்கப் பொது நிதியில் சேர்க்க முடியும். ஆகவே இந்தப் பணத்தை சேர்த்து வைப்பதைவிட, ரோடுகள் செப்பனிட வேண்டியிருந்தால், அதற்குப் பயன்படுத்தலாம். மதுரையைப் பொறுத்த வரையில், அங்கே இருக்கிற சர்க்கரை ஆலைக்குப் போகிற அலங்காநல்லூர் ரோடு மிகவும் மோசமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு டெவலப்மெண்ட் கமிட்டி கூட்டத்திலேயும் இதைச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆகவே அங்கு கிடைக்கிற செஸ் பணத்தைக்கொண்டு, அந்த ரோடை மராமத்து செய்து, அபிவிருத்தி செய்ய உடனடியாக அரசாங்கம் தாக்கீது அனுப்புமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒன்று சொன்னேன். இந்த வினா வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தது. ஆகவே வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள குறிப்பிட்ட மில்லில் இருந்து 1970–71-ல் செஸ் வசூலாகாமல் இருந்திருக்க முடியும். ஆகவே செலவு செய்யாமல் இருக்க முடியும் என்பதல்ல. அல்லது செஸ் ஃபண்டிலிருந்து இல்லாமல் ஜெனரல் ஃபண்டிலேயிருந்து வந்தது என்று கொள்ளமுடியாது. இது 1949-லிருந்து இருக்கிறது. இதைவிட கேள்வி நேரத்தில் அதற்கு விரிவாகச் சொல்வதற்கு இயலவில்லை.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குப் பதில் கூறினார்கள். ஆனால் வருவாயே இல்லாதபோது ரூ. 25,000 செலவு செய்தார்கள், இது ஏன் என்பதற்கு

அமைச்சர் அவர்கள் பதில் கூறவில்லை. அதற்கான பதிலை அவர்கள் கூறும்படி நான் கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் கூட்டுறவு மில் அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கிறது. இந்த மில்லில் வசூலிக்க முடியவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். கூட்டுறவு மில் என்பது அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருப்பதால், இதிலிருந்து வசூலிக்க முடியவில்லை என்பது வருத்தத்திற்கு உரியது; இதற்கான காரணத்தை அமைச்சர் அவர்கள் கூற முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, நான் சொல்கிறபோது, இந்த செஸ் ஃபண்ட் என்பது தனித்தனியாக வரவிலே கணக்கு வைக்கப்படாமல் ஒரே ஃபண்டாக இருந்தது. தனித்தனியாக, மாவட்டத்திற்கு மாவட்டம் தனியாக கணக்கு வைக்கவேண்டும் என்று வந்திருக்கிறது என்றேன். ஆனால் ரூ. 25,000 தான் வட ஆற்காடு மாவட்டத்திற்குச் செலவு செய்யப்படுகிறது என்றால், வருவாயே இல்லாமல் செலவு செய்கிறோம் என்றால், அதை ஒரு மாவட்டத்தில் உள்ள சர்க்கரை ஆலையிலிருந்து வசூலிக்க வேண்டும் என்பதல்ல. முன்னால் கணக்கு பொதுவாக இருந்தது. இப்பொழுது தனித்தனியாக இருக்கிறது. ஒரு சர்க்கரை ஆலையிலிருந்து வசூலிக்கப்படுகிற செஸ் பணத்தை அந்த ஏரியாவிலே மட்டும்தான் செலவழிக்கவேண்டும் என்பதிலே நியாயமில்லை என்று சொல்வதிலே நியாயம் உண்டு.

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

MR. CHAIRMAN: I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1975.

(2) பேரவையிலிருந்து செய்திகள்.

MR. CHAIRMAN: I have also received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1975 (L. A. Bill No. 10 of 1975) as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.